# 2017 பெப்ரவரி 23ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2017-02-23

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

**சபாநாயகரின் அறிவித்தல்கள்**

'A' : அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலமொன்றிற்கான சான்றுரை எழுதப்படல்
'B' : பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கூட்டம்

**பத்திரங்கள் சமர்ப்பித்தல்**

(i) 2015 ஆம் ஆண்டுக்கான நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வருடாந்த செயற்றிறன் அறிக்கை
(ii) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை

**குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கையை அக்குழுவின் தவிசாளர் கௌரவ சந்திம கமகே அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**மனுக்களைச் சமர்ப்பித்தல்**

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அவர்களினால் பொதுமனு சமர்ப்பிக்கப்பட்டது.

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 23(2) இன் கீழான வினாக்கள்**

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

இலங்கையில் கொகா கோலா கம்பனியின் உற்பத்தி மையத்தினை நிறுவுதல் தொடர்பானது

**இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்**

(இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 1 முதல் 4 வரையான விடயங்களாகக் காணப்படும்) பின்வரும் விடயங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டன:-

**(i) காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**
**(ii) இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம்** - திருத்தங்களுடன்

### (iii) செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் இரு கட்டளைகள்

**ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை**

"இலங்கை முகங்கொடுக்கும் பெரும் பொருளாதார நெருக்கடி" தொடர்பான ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ பந்துல குணவர்தன அவர்களால் சபையில் பிரேரிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1801 மணியளவில் பாராளுமன்றம் 2017 மார்ச் 07ஆந் திகதி செவ்வாய்க்கிழமை 1300 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*